செ.வெ.எண்: 36 /ஜூலை நாள் : 18.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மருத்துவத் துறையின் சார்பாக உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் அரண்மனையில் இருந்து இன்று (18.07.2017) மருத்துவத்துறையின் (மாவட்ட குடும்பநல செயலகம்) சார்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார். அதன் பிறகு இராமநாதபுரம் நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

நாளுக்கு நாள் பல்கி பெருகி வரும் உலக மக்கள் தொகை குறித்து பொதுமக்களிடையே பொறுப்புணர்ச்சியினை ஏற்படுத்திடும் வகையிலும், உலக மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையிலும் ஆண்டு தோறும் ஜூலை 11-ஆம் நாள் உலக மக்கள் தொகை தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் இன்றைய தினம் இராமநாதபுரம் அரண்மனை பகுதியில் மாவட்ட குடும்ப நல செயலகம் சார்பாக உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இப்பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் அரசு செவிலியர் பயிற்சி பள்ளி மற்றும் இராமநாதபுரம் அரசு மகளிர் கலைக் கல்லூரியைச் சார்ந்த 500க்கும் மேற்பட்ட மாணவிகள் பங்கேற்றனர். இப்பேரணி அரண்மனை வாயிலில் இருந்து துவங்கி சிவில் ராஜவீதியில் உள்ள இராமநாதபுரம் நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் நிறைவு பெற்றது.

அதனைத் தொடர்ந்து நலப்பணிகள் இணை இயக்குநர் அலுவலகத்தில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பங்கேற்ற அனைவரும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

கருத்தரங்கினைத் துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

உலக மக்கள் தொகையானது நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகின்றது. 2011ஆம் ஆண்டு உலக மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, உலக மக்கள் தொகை 733.6 கோடியாகவும், இந்தியாவின் மக்கள் தொகை 171 கோடியாகவும், தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.21 கோடியாகவும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மக்கள் தொகை 13.53 இலட்சமாகவும் உள்ளது. இம்மக்கள் தொகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் பொதுமக்களுக்கு மக்கள் தொகை பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகும். அளவான குடும்பம் வளமான வாழ்விற்கு வழிவகை செய்திடும் என்ற எண்ணத்தினை பொதுமக்களிடையே ஏற்படுத்திட வேண்டும். திருமணங்களைப் பொருத்தவரை ஆணிற்கு 25 வயதாகவும், பெண்ணிற்கு 21 வயதாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குழந்தை திருமணங்களை அறவே தவிர்த்திட வேண்டும். 2 குழந்தைகளுக்கு மேல் பிரசவித்த தம்பதியர்களுக்கு குடும்ப நல அறுவைச் சிகிச்சையின் (கருத்தடை) அவசியம் குறித்து ஆலோசனைகள் வழங்கிட வேண்டும். அதே வேளையில் குழந்தையில்லா தம்பதியர்களுக்கு உரிய ஆலோசனைகள் மற்றும் மருத்துவ சேவைகள் குறித்தும் எடுத்துரைத்திட வேண்டும்.

நாட்டின் சீரான வளர்ச்சிக்கு ஆரோக்கியமான மனிதவளம் அடிப்படையானது என்பதை உணர்ந்து, பொதுமக்கள் அளவான குடும்பம் வளமான வாழ்வு என்ற நோக்கத்தினை குறிக்கோளாக கொண்டு மக்கள் தொகை பெருக்கத்தினை கட்டுக்குள் கொண்டுவர ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர்களிடையே நடத்தப்பட்ட விழிப்புணர்வு பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவியர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மருத்துவத்துறை துணை இயக்குநர்கள் (ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம்) மரு.ஏ.சகாய ஸ்டீபன்ராஜ், (காசநோய்) மரு.அ.முனியரசு, (தொழுநோய்) மரு.ஆர்.ரவிச்சந்திரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு.என்.கருப்புச்சாமி, நிலைய மருத்துவ அலுவலர் மரு.எஸ்.விநாயகமூர்த்தி, மாவட்ட குடும்ப நல செயலக தகவல் அலுவலர் திருமதி.சௌ.செல்லமுத்து உள்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**